


சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி திருக்கோஷ்டியூர் ஊராட்சி கழகத்தின் சார்பில் கழக முதல்வர் தளபதி அறிவிப்பின்படி திராவிடப் பொங்கல் விழா மற்றும் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற மின்னொளி கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளை கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கேஆர். பெரிய கருப்பன் வழங்கிபாராட்டி னார். இந்த நிகழ்ச்சியில் மாவட்டவிவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.அருணாச்சலம், மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் எஸ்.எஸ்ஏ.வல்லபாய், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, ஊராட்சி செயலாளர் கார்த்திகேயன், நிர்வாகிகள் வசந்த் ,மாணிக்கம் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்




விருதுநகர் வடக்கு மாவட்டம் திருச்சுழியில் துணை முதலமைச்சர் உயர்நிதி ஸ்டாலின் பிறந்தநாள் மற்றும் திராவிடப் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டியை நடத்தி அதில் வெற்றி பெற்ற முதல் அணிக்கு பரிசாக ஒரு லட்சம் ரூபாய் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார். உடன் விருதுநகர் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, காரியாபட்டி நகர செயலாளர் செந்தில், ஒன்றிய செயலாளர்கள் திருச்சுழி பொன்னுத்தம்பி, காரியாபட்டி மேற்கு மந்திரி ஓடை கண்ணன், காரியாபட்டி கிழக்கு எம்.செல்வம், நரிக்குடி வடக்கு கண்ணன், திருச்சுழி வடக்கு சந்தான பாண்டியன், நரிக்குடி தெற்கு இசலி ரமேஷ், மாவட்ட வர்த்தக அணி தங்க தமிழ்வாணன், இளைஞர் அணி சேகர், மல்லாங்கிணறு ஜெயச்சந்திரன் என்ற போஸ் மற்றும் கழக நிர்வாகிகள் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.






மதுரை மாவட்டத்தில் 17ஆம் தேதி நடைபெறவுள்ள தமிழர்களின் பாரம்பரியமிக்க உலகப்புகழ் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், 16ஆம் தேதி பாலமேட்டில் நடைபெற உள்ள ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வரவேற்பது தொடர்பான கிழக்கு சட்டமன்ற தொகுதி பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் உத்தங்குடி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றதில் வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், வழக்கறிஞர் கலாநிதி, நேரு பாண்டியன், வடிவேல் முருகன், அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதிவாணன், ஹக்கீம், சசிகுமார், மருது பாண்டியன், பாண்டியராஜன், கௌரிசங்கர், ரோகிணி பொம்மதேவன், எம்.இளங்கோ, வீரராகவன், ஆதிசங்கர், அண்ணாமலை, வினோத், பாலாண்டி, துரைப் பாண்டியன், வெற்றிச்செல்வன், மருதுராஜா, வன்னி முத்துப்பாண்டி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

### வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றுகிறார்

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!

*மதுரை,ஜன.11-*

மதுரை மாவட்டத்தில் நடைபெற உள்ள ஜல்லிக்கட்டு விழாக்களை துவக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலாளர் இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் சிறப்பான வரவேற்பு கொடுப்பது மற்றும் விருதுநகரில் நடைபெறும் இளைஞரணி மாநாட்டில் பங்கேற்று சிறப்பிப்பது குறித்த மதுரை தெற்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம் இன்று (11.01.2026 -ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு திருமங்கலம் மேலக்கோட்டை ஜி.கே. பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளதாகவும், இதில் வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார் அதன் விபரம்:-

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டத்தில் வருகிற 17ஆம் தேதி நடைபெற உள்ள உலக புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகைதர உள்ளார், அதேபோன்று இளைஞர்களின் நம்பிக்கையாக விளங்கும் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16ஆம் தேதி பாலமேட்டில் நடைபெற உள்ள ஜல்லிக்கட்டுப் போட்டிகளை துவக்கி வைக்க வருகை தர உள்ளார்

இந்த இரண்டு முக்கிய



விழாக்களிலும் தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்று இருவருக்கும் உற்சாக வரவேற்பு கொடுப்பது மற்றும் விருதுநகரில் நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டில் கழக இளைஞர் அணி திரளாக பங்கேற்பது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்த தெற்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (11.01.2026- ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு திருமங்கலம் நான்கு வழிச்சாலையில் அமைந்துள்ள மேலக் கோட்டை ஜி.கே. பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது

இந்த கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று பல்வேறு ஆலோசனைகள் வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன். தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### காரைக்குடியில் ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம் துவக்கம்

# மக்களின் உணர்வுகளை நிறைவேற்றுவதில் முதல்வர் முன்மாதிரியாக உள்ளார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, ஜன. 11 -*

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் தமிழக முதல்வர் அவர்களால் திருவள்ளூர் மாவட்டத்தில் 9ம்தேதி ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம் துவக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைச்சர்கள் இத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். அதன்படி சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி கா. பொற்கொடி தலைமையில் எஸ். மாங்குடி எம்.எல்.ஏ .முன்னிலையில் நடைபெற்றது.

திட்டத்தினை துவக்கி வைத்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

பொதுமக்களின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வதில் தமிழக முதல்வர் சிறந் துவிளங்கி வருகிறார். ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம் ஒரு புதிய முன்னோடியான திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வலர்கள் உங்கள் வீடுகளுக்குத் தேடி வந்து உங்களின் குறைகளை, தேவைகளை கேட்டு அறிந்து அவற்றை தீர்ப்பதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபடும். இதுமற்ற திட்டங்களுக்கு முன்னோடியான ஒரு திட்டம் ஆகும். .கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி அதை செயல் படுத்தியுள்ளார் .நான் முதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், மகளிர் விடியல்பயணம் கலைஞர், மகளிர் உரிமைத் தொகை ,கல்லூரி மாணவி மாணவர்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் வழங்குதல், பொங்கல் பரிசு தொகை , அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான ஓய்வூதிய திட்டம் இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வரலாறு படைத்து வருகிறார். இந்த திட்டங்களினால் தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பயனடைந்துள்ளனர்.

‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம் மூலம் மக்களுடைய விருப்பங்களை அறிந்து அவைகளை சேகரித்து அந்த திட்டத்தின் எதிர்கால கொள்கைகளையும் மேம்பாட்டு திட்டங்களையும் வகுப்பதற்கு ஏதுவாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. 2030 ஆண்டு மாநில வளர்ச்சிக்கு உதவும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத் திட்டம் ஒரு தொலை நோக்கு பார்வையுடன் தயாரிக்கப்பட்ட உயர்ந்த திட்டமாகும் .

சிவகங்கை மாவட்டத்தில் 3 லட்சத்து 8 ,16 ,738 பொதுமக்களை நேரடியாக 891 தன்னார்வலர்கள் அவர்கள் நேரடியாக சென்று கணக்கெடுப்பை நடத்த உள்ளார்கள். இந்த திட்டம் குறித்து திட்டத்திற்கான தனி செயலி மூலம் முழுமையாக பதிவு செய்யப்பட உள்ளது. மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தனியான விவரங்களும் பெற்று அதற்கு அடையாளமாக கனவை சொல்லுங்க என்ற புதிய சிம் கார்டு வழங்கப்பட உள்ளது . இதற்கான கிட் தன்னார்வ தொண்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இத்திட்டத்தினை நன்றாக பயன்படுத்திக் கொண்டு தங்களது தேவைகளை தெரிவித்து பயன்அடையு மாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் பேசினார். இந்த நிகழ்ச்சியில் மாநகர துணை மேயர்.நா. குணசேகரன், வட்டாட்சியர் ராஜா மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டார்

### ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழக

# முன்னாள் துணைச் செயலாளர் - கழக மூத்த முன்னோடி செ.கண்ணப்பன் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜன.11-**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான செ.கண்ணப்பன் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:**

ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளராகவும் மாவட்டக் கழகப் பொருளாளராகவும், சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவராகவும், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்த கழகத்தின் மூத்த முன்னோடி அண்ணன் செ.கண்ணப்பன் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

இளம் பிராயம் தொட்டு தான் ஏற்றுக் கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் வழுவிடாது தீவிர கழகப் பணியாற்றியவர் அவர்.



கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறையேகியவர் ; கழகத்தின் அடுத்த தலைமுறை இளைஞர்கள் தீவிரமாகப் பணி யாற்றுவதற்கு தூண்டுகோலாக இருந்து அவர்களை வழிநடத்தியவர் !

அவரது மறைவு கழகத்திற்கு இழப்பு எனில் அது மிகையல்ல !

அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத்தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு ”திராவிட பொங்கல் விளையாட்டு போட்டியாக குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கிரிக்கெட் போட்டியானது லெட்சுமிபுரம் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வைத்து குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.பி.சந்திரா தலைமையில் நடைபெற்றது.சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்து சிறப்பித்தார். நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர்கள் வி.ராபர்ட் கிளாரன்ஸ், அ.சேவியர் ஏசுதாஸ், குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய துணை செயலாளர் ரமணிரோஸ், குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஐ.சசி சுபாசிங், கழக நிர்வாகிகள் டேவிஸ் ராஜன், செல்வதாஸ், ஜான்லீபன், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மாநகராட்சி, கரையிருப்பு பகுதியில் முதல்வர் அறிவித்த பொங்கல் பரிசுத் தொகை ரூ.3000 மற்றும் வேட்டி,சேலை உட்பட்ட பொருட்களை மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ. பெருமாள் பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் தலைமைக் கழக சொற்பொழிவாளர்கள் நெல்லை முத்தையா,சி.பா. இராவணன்,மில் ஜெ. குமார் மற்றும் வட்டச் செயலாளர் சடாமுனி, தாமஸ்,சுப்பையா,எம். நித்யா, சங்கரபாண்டியன், திருவேங்கடம், போஸ்ட்மேன் முருகேசன், வழக்கறிஞர் ஏ. முகேஷ்,சித்திரை முத்துக்குமார் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.